குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
**முன்னிலை : திரு. K. கமலநாதன், B.Sc., B.L.,**

விரைவு குற்றவியல் நீதிமன்றம், மயிலாடுதுறை.

நீதித்துறை நடுவர் எண்.1, மயிலாடுதுறை. (மு.கூ.பொ)

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி திங்கள் 19 ஆம் நாள்

2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் நாள் செவ்வாய்க் கிழமை

**C.N.R.No. TNMY02-002656-2024**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 215/2024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக :– காவல் உதவி ஆய்வாளர்,<br>குத்தாலம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 20/2024 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | 1) ரத்தீஷ், 20/2024,<br>த/பெ தங்கம்,<br>பெரிய தெரு, அசிக்காடு,<br>குத்தாலம்.<br><br>2) ஹரீஷ்,21/2024<br>த/பெ தங்கம்,<br>பெரிய தெரு, அசிக்காடு,<br>குத்தாலம்.<br><br>3) சூர்யா, 20/2024,<br>த/பெ சுமன்,<br>பெரிய தெரு, அசிக்காடு,<br>குத்தாலம்.<br><br>4) சஞ்சய்,21/2024<br>த/பெ சங்கர்,<br>பெரிய தெரு, அசிக்காடு,<br>குத்தாலம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 17.01.2024 | |
| 4 | புகார் நாள் | : | 20.01.2024 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | --- | 1,3,4 எதிரிகள் 02.02.2024 ( முன்பிணை) |
| | | | 2 வது எதிரி 20.01.2024 | 24.01.2024 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 27.05.2024 | |
| 7 | கு.வி.மு.ச. பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவப்பட்ட நாள் | : | 16.02.2024 | |
| 8 | பிரிவு 317 of Cr.P.C ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | --- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 17.06.2025 | 17.06.2025 |
| | | | அ.சா.2 | 18.07.2025 | 18.07.2025 |
| | | | அ.சா.3 | 29.07.2025 | 29.07.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.4 | 24.02.2026 | 24.02.2026 |
| | | | அ.சா.5 | 24.02.2026 | 24.02.2026 |
| | | | அ.சா.6 | 12.05.2026 | 12.05.2026 |
| | | | அ.சா.7 | 30.06.2026 | 30.06.2026 |
| | | | அ.சா.8 | 21.07.2026 | 21.07.2026 |
| | | | அ.சா.9 | 21.07.2026 | 21.07.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் வினவிய நாள் | : | 23.07.2026 | | |

இவ்வழக்கு 08.11.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 23.07.2026 ஆம் தேதி இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 திருமதி. B. செந்தில்வடிவு அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

1) இவ்வழக்கின் வாதி தியாகராஜன் என்பவர் தெற்குதெரு மறையூரை சேர்ந்தவர் ஆவார். எதிரிகள் நால்வரும் அசிக்காடு பெரிய தெருவைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். மேற்படி வாதி தியாகராஜன், எதிரிகளின் தெருவை சேர்ந்த ராஜஸ்ரீ என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டது பிடிக்காமல் 17.01.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் அசிக்காடு பெரிய தெருவில் பொங்கல் பண்டிகை என்பதால் தனது மாமியாரை பார்க்க வந்த வாதியை எதிரிகள் காமகுரோதமாக திட்டியும், கையில் வைத்திருந்த கம்பியால் வாதியின் வலது கை, தோள்பட்டை, தலை ஆகிய இடங்களில் தாக்கி வாதிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், இரும்பு கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள்

294(b), 326, 506(ii) இதசவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழ் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு தமிழில் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார்கள். பின்னர் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>

5) **அ.சா.1 தியாகராஜன்** தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 ம் தேதி இரவு 09.00 மணி அளவில் தான் தனது மாமியார் வீட்டிற்கு தனது நண்பர்களான பாபுராஜ், ராஜா ஆகியோர்களுடன் தனது இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு திரும்பி வரும் வழியில் ஆஜர் எதிரிகள் நால்வரும் தன்னிடம் எங்கள் ஊர் பெண்ணை எப்படி காதலித்து திருமணம் செய்து கொள்ளலாம் என்றும், எப்படி எங்கள் ஊருக்குள் வரலாம் என்று கேட்டனர் என்றும், குச்சிக்காரி தேவுடியா மகனே எப்படி எங்கள் ஊருக்குள் வரலாம் என்று சொல்லி எதிரி ரத்தீஸ் என்பவர் கையில் வைத்திருந்த இரும்பு ராடால்

தனது வலது கையின் தோள்பட்டையிலும், தலையிலும் அடித்தார் என்றும், தான் மயக்கமாகி கீழே விழுந்து விட்டேன் என்றும், தன்னுடன் வந்த தனது நண்பர்கள் தன்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், சிகிச்சையில் இருக்கும்போது போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விபரங்களை தான் போலிசாரிடம் கூறினேன் என்றும், **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தான் 3 வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6) **அ.சா.2 பாபுராஜ்** தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 ம் தேதி அன்று அ.சா. 1 உடன் அவருடைய மாமியார் வீடான அசிக்காட்டிற்கு சென்று விட்டு அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தில் ப.சா.4 ராஜா என்பவர் ஓட்ட, தாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து கொண்டு இரவு 09.00 மணி அளவில் அசிக்காடு பெரிய தெருவிற்கும் மெயின்ரோட்டிற்கும் இடையில் வந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அந்த இடத்தில் தங்களது பைக்கானது நின்றுவிட்டது. தங்களிடம் ஆஜர் எதிரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆஜர் எதிரிகளில் ரத்தீஸ், அ.சா.1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி, தன்னை அந்த ஊரைச்சேர்ந்த 2 பையன்கள் இங்கு ஏன் வந்தாய் என்று கேட்டு, தன்னை மெயின் ரோட்டிற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அ,சா.1 ஐ கூட்டமாக நின்று கொண்டு அடித்தார்கள். தன்னை இழுத்துச்சென்ற பையன்களிடம் தன்னை விடுங்கள், தன்னுடன் வந்த அ.சா.1 ஐ ஏன் அடிக்கிறார்கள் என்று கூறினேன். அவர்கள் விட்ட பிறகு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது அ,சா.1 தனது வலது பக்க தோள்பட்டையை பிடித்து கொண்டு வந்தார். முகத்தில் இருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. அ.சா.1 தன்னிடம் என்னை அடித்து விட்டார்கள் என்று கூறினார். வலிக்குது வலிக்குது என்று கூறினார். தான் அ.சா.1 ன் அண்ணன் வினோத்திற்கு மேற்படி தகவலை கூறினேன். அவர் வந்து அ.சா.1 ஐ இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

கொண்டு சேர்த்தார். தானும் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன் என சாட்சியமளித்துள்ளார்.

7) **அ.சா.3 சிலம்பரசன்** தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024ம் தேதி அன்று இரவு 09.00மணியளவில் மறையூரில் உள்ள மதகடியில் ஒரே கூட்டமாக இருந்தது. என்னவென்று தான்போய் பார்த்தபோது அசிக்காட்டில் உள்ள பசங்கள் அ.சா.1ஐ அடித்து விட்டதாக கூறினார். தான் அதன் பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்து அ.சா.1ஐ பார்த்தேன். அ.சா.1க்கு மேற்படி சண்டையின் காரணமாக இடது கண் வீங்கி இருந்தது. தோள் பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்று சாட்சியமளித்துள்ளார்.

8) **அ.சா.4 துரைராஜ்** தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளுக்கும் மறையூரில் உள்ள பசங்களுக்கும் பொங்கல் தினத்தன்று சண்டை நடந்தது. அந்த சண்டை சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து போட்டோ எடுத்துக்கொண்டார்கள். தங்களிடம் சாட்சி கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் தன்னிடத்தில் காட்டப்படும் **பார்வை மகசரில் உள்ள அ.சா.ஆ.2 ஆன முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான்**. தன்னுடன் சரண்ராஜ் என்பவரும் கையெழுத்து செய்தார் என சாட்சியமளித்துள்ளார்.

9) **அ.சா.5 சரண்ராஜ்** தனது சாட்சியத்தில், கடந்த 2024ஆம் ஆண்டு பொங்கல் அன்று அ.சா.1 தியாகராஜனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது என்று கேள்விபட்டதாகவும், அடுத்த நாள் போலீசார் ஆர்ச்சு அருகே வந்து விசாரணை செய்தார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்களில் தன்னுடையது எதுவும் இல்லை என்று பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

10) **அ.சா.6 ராஜா** தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 இரவு 9.00 மணியளவில் அசிகாட்டில் நடந்த பொங்கல் விழாவிற்கு தானும், பாபுராஜ், தியாகராஜன்

ஆகியோர் சென்றிருந்ததாகவும், பொங்கல் விழா முடிந்துவிட்டு அசிக்காட்டில் மெயின் ரோட்டிற்கு வந்தோம் என்றும், அந்த இடத்தில் எதிரிகள் நான்கு பேரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் தங்களை பார்த்து யார் என்று கேட்டார்கள். அ.சா. 1 யை பார்த்து எதிரிகள் குச்சிக்காரி தேவுடியா மகனே என்று திட்டினார்கள். எதிரிகள் நான்கு பேரும் அ.சா.1 உடன் சண்டை போட்டு அ.சா.1 யை கட்டை மற்றும் இரும்பு வாளைக் கொண்டு வலது பக்க தோல் மற்றும் நெற்றியில் அடித்தார்கள். அ.சா.1 யை எதிரிகள் அடித்ததை நாங்கள் தடுத்த போது ஊர் பசங்க 2 பேர் தங்களை இழுத்து விட்டு போய்விட்டார்கள். தங்கள் ஊர் பசங்க வந்து அ.சா.1 யை வீட்டிற்கு அழைத்து சென்று விட்டார்கள் என சாட்சியமளித்துள்ளார்.

11) **அ.சா.7தமிழ்குமரன்** தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 ஆம் தேதி இரவு 11.25 மணியளவில் தான் பணியில் இருந்தபோது தியாகராஜன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வந்தவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவில் இருந்தார். மேலும் அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்களும் அடையாளம் தெரியாத 17 நபர்களும் அசிக்காடு என்ற இடத்தில் கத்தியாலும் கட்டையாலும் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு 1. சிதைந்த காயம் இடது புற முன் தலையில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது. 2. சிதைந்த காயம் இடது புற தலையின் பக்கவாட்டில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது. 3. இடது கண் வீங்கிய நிலையில் காணப்பட்டது. 4. வலது தோள்பட்டை வீங்கிய நிலையில் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் மற்றும் தலைக்கு C.T Scan எடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. நுண்கதிர் படத்தில் வலது தோள்பட்டை எலும்பு விலகி காணப்பட்டது. தோள் பட்டை எலும்பில் முறிவு இருந்தது. தலைக்கு எடுக்கப்பட்ட C.T Scan Normal என முடிவு வந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன் என்றும், **விபத்து பதிவேட்டுடன் கூடிய சான்று ஆவணம் அ.சா.ஆ.3 என்றும்** சாட்சியம் அளித்துள்ளார்.

12) **அ.சா.8 பன்னீர்செல்வம்** தனது சாட்சியத்தில், தற்போது குத்தாலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி காவல்

நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது கடந்த 17.01.2024 ஆம் தேதி 21.00 மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று உடனடியாக மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த தியாகராஜன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று, அதன் பிறகு நிலையம் வந்து 18.01.2024 ஆம் தேதி மனு ரசீது 73/2024 பதிவு செய்து, அதன் பிறகு 20.01.2024 ஆம் தேதி காவல் நிலைய குற்ற எண் 20/2024 இதச பிரிவுகள் 294(b),324,506(2) பிரிவுகளின் கீழ் **ஆ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கு கோப்புகளை மேல் நடவடிக்கைகாக உதவி ஆய்வளார் வசம் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13) **அ.சா.9 கலியபெருமாள்** தனது சாட்சியத்தில், தற்போது சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் குத்தாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 20.01.2024 ஆம் தேதி மேற்படி வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 14.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் துரைராஜ், சரண்ராஜ் ஆகியோர் முன்னிலையில் **அ.சா.ஆ.5 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.6 ஆன வரைபடம்** தயார் செய்ததாகவும், சாட்சிகள் பாபுராஜ், ராஜா, சிலம்பரசன், தியாகராஜன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரிகளை தேடி அசிக்காடு பஸ் ஸ்டாப் அருகே எதிரி சூர்யா, என்பவரை 16.30 மணிக்கு கைது செய்தும், உறவினர்களுக்கு தகவல் கொடுத்தும் 17.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், மற்ற எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், காயம்பட்ட தியாகராஜனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்குமரன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றதாகவும், மருத்துவரின் காயச்சான்று படி காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவுகளை 294(b), 324, 506(2) லிருந்து 294(b), 326, 506(2) சட்டப்பிரிவுகளாக மாற்றி சட்டப் பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்ததாகவும், மேற்படி விசாரணையை முடித்து மேற்படி எதிரிகள் மீது 294(b),326,506(2) ன் படி குற்ற

இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரிகளிடம் பிரிவு 351(1) (b)–ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

15) **இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,** அரசு தரப்பில் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

16) **இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.**

**தீ ர் வு:–**

17) அரசு தரப்பில், கடந்த 17.01.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் அ.சா.1ஐ, எதிரிகள் காமகுரோதமாக திட்டியதாகவும், கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் அ.சா.1ன் வலது கை, தோள்பட்டை, தலை ஆகிய இடங்களில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், இரும்பு கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரிகள் மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

18) அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.2, அ.சா.6 இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சிகளாவார்கள். அ.சா.3 சம்பவத்தை பற்றி கேள்விபட்ட சாட்சியாவார். அ.சா.4, 5 பார்வை மகசர் சாட்சிகளாவார்கள்.

19) முதலில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 294(b)ன் படியான குற்றச்சாட்டு குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 ம் தேதி இரவு 09.00 மணி அளவில் தான் தனது மாமியார் வீட்டிற்கு தனது நண்பர்களான பாபுராஜ், ராஜா ஆகியோர்களுடன் தனது இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு திரும்பி வரும் வழியில் ஆஜர் எதிரிகள் நால்வரும் தன்னிடம் எங்கள் ஊர் பெண்ணை எப்படி காதலித்து திருமணம் செய்து கொள்ளலாம் என்றும், எப்படி எங்கள் ஊருக்குள் வரலாம் குச்சிக்காரி, தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

20) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 ம் தேதி அன்று அ.சா. 1 உடன் அவருடைய மாமியார் வீடான அசிக்காட்டிற்கு சென்று விட்டு அ.சா. 1 ன் இருசக்கர வாகனத்தில் ப.சா.4 ராஜா என்பவர் ஓட்ட, தாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து கொண்டு இரவு 09.00 மணி அளவில் அசிக்காடு பெரிய தெருவிற்கும் மெயின்ரோட்டிற்கும் இடையில் வந்தபோது ஆஜர் எதிரிகள் அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்தனர் என்றும், அந்த இடத்தில் தங்களது பைக்கானது நின்றுவிட்டது என்றும், தங்களிடம் ஆஜர் எதிரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், திடீரென்று ஆஜர் எதிரிகளில் ரத்தீஸ், அ.சா.1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என சாட்சியம் அளித்துள்ளார்.

21) மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 17.01.2024 இரவு 9.00 மணியளவில் அசிகாட்டில் நடந்த பொங்கல் விழாவிற்கு தானும், பாபுராஜ், தியாகராஜன் ஆகியோர் சென்றிருந்ததாகவும், பொங்கல் விழா முடிந்துவிட்டு அசிக்காட்டில் மெயின் ரோட்டிற்கு வந்தோம் என்றும், அந்த இடத்தில் எதிரிகள் நான்கு பேரும் உட்கார்ந்திருந்திருந்தனர் என்றும், அவர்கள் தங்களை பார்த்து யார் என்று கேட்டார்கள் என்றும், அ.சா. 1 யை பார்த்து எதிரிகள் குச்சிக்காரி தேவுடியா மகனே என்று திட்டினார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

22) இந்நிலையில், இதச பிரிவு 294(b) ன் முக்கிய அம்சங்களை பார்க்கும்பொழுது Section 294. Whoever, to the annoyance of others–a) does any obscene act in any public place or b) sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place. என கூறப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய பிரிவின் மூலம் வழக்கு சம்பவமானது பொது இடத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதும், எதிரிகளின் செய்கையால் அருகில் இருந்தவருக்கு அருவறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாக தெரிகிறது. இந்த வழக்கில் வழக்கு சம்பவமானது பொது இடத்தில் ஏற்பட்டதாக காணப்படவில்லை. மேலும் எதிரிகள் பேசிய வார்த்தைகளால் அருகில் இருந்தவருக்கு அருவறுப்பு ஏற்பட்டதாக கூறி யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 294(b) ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்யவேண்டியுள்ளது.

23) அடுத்ததாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 506(ii) ன் படியான குற்றச்சாட்டு குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மற்றும் இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களில் எந்த இடத்திலும் அ.சா.1 க்கு எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை.

24) இந்நிலையில், இதச பிரிவு 506 ன் முக்கிய அம்சத்தை பார்க்கும்பொழுது 1. எதிரி வாதிக்கு கொலை மிரட்டல் விடுத்திருக்க வேண்டும். 2. எதிரி பேசிய வார்த்தைகள் உண்மையில் வாதிக்கு அச்சத்தையும், மரண பயத்தையும் உண்டாக்குவதாக இருக்க வேண்டும். வெறும் வார்த்தையால் மட்டும் செய்யப்படும் மிரட்டல் மரண பயம் ஆகாது. நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 1. The Noble Mohandass Vs State 2. Subramaniansamy Vs State போன்ற வழக்குகளில் இதுபற்றிதெளிவாக கூறியுள்ளது.

25) மேலும், நமது மாண்பமை உச்சநீதிமன்றம் Manik Taneja Vs State of Karnataka என்ற வழக்கில் The Threat must be with intention to cause alarm to the complainant to cause that person to do or omit to do any work. Mere expression of any words without any intention to cause alarm would not be sufficient to bring in the application of this section. என தீர்வு கண்டுள்ளது. எனவே, இதிலிருந்து வெறும் வார்த்தையால் மட்டுமே மிரட்டுவது, இந்த பிரிவிற்கு பொருந்தாது என்பது தெளிவாக தெரிகிறது. இந்த வழக்கில் வாதியை மிரட்டியதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும் அவ்வாறு எதிரிகள் மிரட்டியதால் தனக்கு அச்சமும், உயிர் பயமும் ஏற்பட்டதாக கூறி அ.சா.1 சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, வெறும் வார்த்தையால் கூறும் மிரட்டலுக்கு இப்பிரிவு பொருந்தாது என்பது தெளிவாக தெரிகிறது. இவ்வாறான சூழ்நிலையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 506(ii) ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்யவேண்டியுள்ளது.

26) அடுத்ததாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 326ன் படியான குற்றச்சாட்டு குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், சம்பவதினத்தன்று எதிரிகள் நால்வரும் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, எதிரி ரத்தீஸ் என்பவர் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் தனது வலது கையின் தோள்பட்டையிலும், தலையிலும் அடித்தார் என்றும், தான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன் என்றும், தன்னுடன் வந்த நண்பர்கள் தன்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

27) அ.சா.2 தனது சாட்சியத்தில், தன்னை அந்த ஊரைச்சேர்ந்த 2 பையன்கள் இங்கு ஏன் வந்தாய் என்று கேட்டு, தன்னை மெயின் ரோட்டிற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள் என்றும், அ.சா.1 ஐ கூட்டமாக நின்று கொண்டு அடித்தார்கள் என்றும், தன்னை இழுத்துச்சென்ற பையன்களிடம் தன்னை விடுங்கள், தன்னுடன் வந்த அ.சா.1 ஐ ஏன் அடிக்கிறார்கள் என்று கூறினேன் என்றும், அவர்கள் விட்ட பிறகு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றும், அப்போது அ.சா.1 தனது வலது பக்க தோள்பட்டையை பிடித்து கொண்டு வந்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

28) அ.சா.6 தனது சாட்சியத்தில் எதிரிகள் நான்குபேரும் அ.சா.1 உடன் சண்டை போட்டு அ.சா.1யை கட்டை மற்றும் இரும்பு வாளைக்கொண்டு வலது பக்க தோல், மற்றும் நெற்றியில் அடித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

29) இந்நிலையில் அ.சா.1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.7 ன் சாட்சியத்தை கவனத்துடன் பரிசீலனை செய்கையில், கடந்த 17.01.2024 ஆம் தேதி இரவு 11.25 மணியளவில் தான் பணியில் இருந்தபோது தியாகராஜன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வந்தவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவில் இருந்தார் என்றும், மேலும் அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்களும் அடையாளம் தெரியாத 17 நபர்களும் அசிக்காடு என்ற இடத்தில் கத்தியாலும் கட்டையாலும் தன்னை தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு 1. சிதைந்த காயம் இடது புற முன் தலையில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது. 2. சிதைந்த காயம் இடது புற தலையின் பக்கவாட்டில் 3x1x1 செ.மீ. என்ற அளவில் இருந்தது. 3. இடது கண் வீங்கிய நிலையில் காணப்பட்டது. 4. வலது தோள்பட்டை வீங்கிய நிலையில் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் மற்றும் தலைக்கு C.T Scan எடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. நுண்கதிர் படத்தில் வலது தோள்பட்டை எலும்பு விலகி காணப்பட்டது. தோள் பட்டை எலும்பில் முறிவு இருந்தது. தலைக்கு எடுக்கப்பட்ட C.T Scan Normal என முடிவு வந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

30) வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களை முழுமையாக பரிசீலித்ததில், குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆபத்தான ஆயுத்தைக் கொண்டு பாதிக்கப்பட்டவருக்கு காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

31) ஆயினும், பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 320 –இல் வரையறுக்கப்பட்ட கொடுங்காயம் ( Grevious Hurt) என்பதற்கு

உட்பட்டது என்பதை நிரூபிக்கும் போதிய மருத்துவ சான்றாவணங்களோ அல்லது நம்பத்தகுந்த ஆதாரங்களோ வழக்கறிஞர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. குறிப்பாக, எலும்பு முறிவு, நிரந்தர ஊனம் அல்லது பிரிவு 320– இல் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த கொடுங்காயமும் ஏற்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்படவில்லை.

32) எனவே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 326இன் அத்தியாவசிய கூறுகளில் ஒன்றான கொடுங்காயம் ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்படாத காரணத்தால் அப்பிரிவின் கீழ் குற்றவாளி என அறிவிக்க இயலாது.

33) எனினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆபத்தான ஆயுதத்தை கொண்டு தன்னிச்சையாக காயம் விளைவித்துள்ளார் என்பது சாட்சிகள் மற்றும் மருத்துவ ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 324ன் அனைத்து கூறுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

34) எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம்பிரிவு 326 –இன் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார். அதற்கு பதிலாக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 324இன் கீழ் குற்றவாளி என அறிவிக்கப்படுகிறார்.

35) எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 324ன் படியான குற்றச்சாட்டில் 2,3,4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேககத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், 1 வது எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டில் 1 வது எதிரி குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

36) **முடிவாக,** 2 முதல் 4 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழான குற்றங்களில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்தும், 1 வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), 506(ii) ன்

கீழான குற்றங்களில் 1வது எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்தும் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து 1 முதல் 4 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டில் 1 வது எதிரியை குற்றவாளி என குவிமுச பிரிவு 248(2) ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

37) 1 வது எதிரி, அ.சா.1ஐ கம்பியால் தாக்கி அவருக்கு **சொற்ப காயத்தை** ஏற்படுத்திய குற்றத்திற்காக இதச பிரிவு 324ன் படி குற்றவாளி என குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் முடிவு செய்யப்படுகிறது.

38) முடிவில், 1 வது எதிரி குற்றம்புரிந்த விதத்தை கருத்தில்கொண்டும், குற்றத்தன்மையை கருத்தில் கொண்டும் எதிரி நன்னடத்தை சட்டத்தின் பலனை பெற தகுதியற்றவர் என இந்நீதிமன்றம் தீர்மானித்து எதிரிக்கு விதிக்கப்போகும் தண்டனை பற்றி குவிமுச 248(2)ன் கீழ் வினவியபோது எதிரி கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார்.

**" குறைந்தபட்ச தண்டனை வழங்கவும் "**

(மேற்படி எதிரியின் பதில் தனித்தாளில் நீதிபதியால் எழுதப்பட்டு வழக்கு கோப்புகளுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது.)

39) முடிவில், எதிரி கூறிய பதிலை கருத்தில் கொண்டும், எதிரியின் வயதை கருத்தில்கொண்டும், எதிரியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டும் கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கப்படுகிறது

40) 1 வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 324 ன் கீழான குற்றத்தில் எதிரியை **குற்றவாளி என** தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு அபராதமாக **ரூபாய் 3,000 /–ம்** விதித்தும், அபராதத் தொகையை கட்டத்தவறினால் **01 மாத காலம்** வெறுங்காவல் சிறைத் தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

41) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

42) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.(மு.கூ.பொ)

<u>அட்டவணை</u>

<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. தியாகராஜன் ( புகார்தாரர்)

அ.சா.2 – திரு. பாபுராஜ்

அ.சா.3 – திரு. சிலம்பரசன்

அ.சா.4 – திரு. துரைராஜ்

அ.சா.5 – திரு. சரண்ராஜ்

அ.சா.6 – திரு. ராஜா

அ.சா.7 – திரு. தமிழ்குமரன் ( மருத்துவர்)

அ.சா.8 – திரு. பன்னீர்செல்வம் ( சிறப்பு உதவி ஆய்வாளர்)

அ.சா.9 – திரு. கலியபெருமாள்( உதவி ஆய்வாளர்)

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | |
|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.4 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3/அ.சா.7 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.4/அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.9 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6/அ.சா.9 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை

குறிப்பு

1. எதிரிகள் விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

நீதித்துறை நடுவர் எண்.1

மயிலாடுதுறை.(மு.கூ.பொ)